Ministry of Immigration
and Integration

# குடியிருப்பு மற்றும் சுய பொறுப்பு(Selvforsørgelse) பற்றிய அறிவித்தல்

பெயர்:

அடையாள இலக்கம் / CPRஇலக்கம்:

இங்கு குடியிருக்கும் எனது பிள்ளைகள் , மனைவி/கணவன் ஆகியோரை சொந்தமாக பராமரிப்பதற்கும், அவர்களை டெனிஷ் சமுதாயத்தில் இணைப்பதற்கும், நான் தீவிரமாக பணியாற்றுவேன் என்று இத்தால் உறுதி அளிக்கிறேன்.

நான் தொடர்ந்தும் பின்வருமாறு அறிவிக்கிறேன்:

எல்லா விதங்களிலும், நான் டெனிஷ் சட்டத்தை கடைப்பிடிப்பேன், டெனிஷ் ஜனநாயகக் கோட்பாடுகளை மதிப்பேன்.

டெனிஷ் மொழித் திறனும், டெனிஷ் சமுதாயத்தைப் பற்றிய அறிவும் இருந்தால், அது ஒரு சிறந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு தனிப்பட்ட பிரஜையும், மற்றும் குடும்பங்களும் தாங்கள் வாழுவதற்கு தாங்களே பொறுப்பு என்று நான் உணர்கிறேன்.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு டென்மார்க்கில் சமமான கடமைகளும் உரிமைகளும் இருப்பதை நான் உணர்ந்துள்ளேன், அத்துடன் ஆண்களும் பெண்களும் சமூகத்தில் பங்களிக்க வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை என்பது கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கும் பொருந்தும் . ஆண்களும், பெண்களும் ஜனநாயக செயல்முறைகளில் பங்கேற்க சம உரிமை உடையவர்கள். ஆண் பெண் இருவருக்கும் வரி செலுத்துவதற்கான கடமையும், அத்துடன் அவர்களின் குழந்தைகளுக்கு பெற்றோராக உள்ள பொறுப்பையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பனவற்றை நான் அங்கீகரிக்கிறேன்.

மனைவி மற்றும் பிள்ளைகள் உள்ப்பட்ட மற்றயவர்களுக்கும் எதிராக வன்முறையைப் பிரயோகித்தலும், அவர்களை சட்டவிரோதமான முறையில் வற்புறுத்தலும், டென்மார்க்கில் தண்டனைக்குரிய குற்றம் என்று எனக்குத் தெரியும்.

டென்மார்க்கில் அனைத்து குழந்தைகளுக்கும் அதாவது ஆண், பெண் குழைந்தைகள் இருவருக்கும் ,மரியாதை மற்றும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் சமனாக இருக்க வேண்டும் என்பதை நான் அறிவேன். எனவே அவர்கள் தங்களது சொந்த விருப்பங்களைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பால் , திறமையான , மற்றும் பொறுப்பான குடிமகனாக வரமுடியும். என் குழந்தைகள் சிறந்த முறையில் வளர்வதும் , அவர்கள் கல்வியில் உயர்ந்து விளங்குவதும், மற்றும் அவர்கள் விரைவாக டெனிஷ் சமுதாயத்தில் பங்கேற்பதுவும் எனது பொறுப்பாகும் . எனது பிள்ளை டெனிஷ் மொழியை சீக்கிரத்தில் கற்றுக்கொள்வதற்கும், பாடசாலைப் பாடத்திட்டத்தை திறமையுடன் பூர்த்தி செய்யவும் நான் முடிந்தவரை முயற்சிப்பேன்.

மேலும் எனது பிள்ளையின் சிறுவர்கழக (daginstitution) பணியாட்களுடனும் , பாடசாலை ஆசிரியர்களுடனும் நான் ஒத்துழைப்பேன்.

பெண்களின் விருத்தசேதனம் (Omskæring), கட்டாயத் திருமணம் என்பவை, டென்மார்க்கில் தண்டனைக்குரிய குற்றம் என்பது எனக்குத் தெரியும்.

டென்மார்க்கில் அடிப்படைக் கோட்பாடுகளாகிய தனிப்பட்ட நபரின் சுதந்திரம், தனிப்பட்ட ஒருமைப்பாடு, பாலின சமத்துவம் மற்றும் சமய சுதந்திரம், பேச்சு சுதந்திரம் ஆகியவற்றை மதிக்கிறேன்.

பாலின, தோல்நிற பாகுபாடுகள் மற்றும் சமய நம்பிக்கை , பாலியல் பார்வை என்பனவற்றிக்கு எதிரான கேலிகள், அச்சுறுத்தல் ஆகியன டென்மார்க்கில் தண்டனைக்குரிய குற்றம் என்பதை நான் அறிவேன்.

டெனிஷ் சமூகம் பயங்கரவாதத்திற்கு மிகவும் எதிரானது என்பது எனக்குத் தெரியும். மனித வாழ்விற்கு அல்லது நாட்டின் நல்வாழ்விற்கு ஆபத்தையயும், சமூக மதிப்புகளுக்கு பங்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் ஒருவர் ஒரு குற்றம் செய்தால், அக்குற்றத்தை அல்லது அதன் விளைவுகளைத் தடுக்க, முடிந்த முயற்ச்சி எடுக்கவேண்டும், அவசியமெனில், பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும் . அவ்வாறு செய்யத் தவறினால், அதற்கு, அபராதம் அல்லது 3 ஆண்டுகள் வரை சிறைவாசம் மூலம் தண்டிக்க வாய்ப்புண்டு.

எவ்வளவு காலம் இந்த நாட்டில் எனது குடியிருப்பு இருந்தாலும் , டெனிஷ் சமுதாயத்திற்கு எனது பங்களிப்பைச் செய்வதற்கு தூவிர முயற்சி எடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

டென்மார்க்கில் எனது குடியிருப்புக் காலம் , எனக்குக் கிடைத்த வதிவிட அனுமதி அடைப்படையில்தான் வரையறுக்கப்படுகிறது என்பதுவும், சில குழுக்களுக்கு இது ஒரு தற்காலிக வதிவிடமாகும் என்பதுவும் எனக்குத் தெரியும்.

தாய்நாட்டின் நிலமைகள் மாறி, அந்த மக்கள் இங்கு பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லையெனில் , அவர்கள் அகதிகளாக வசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் , அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போகலாம் என்பதுவும் எனக்குத் தெரியும். இந்த நாட்டில் வசிக்கும் அகதிக்கு இங்கு பாதுகாப்பு தேவைப்படாத பட்சத்தில், அந்த அகதியின் குடும்ப ஒருங்கிணைப்பு நபர் (familiesammenført) , அகதி அந்தஸ்து கோருவது அவசியமில்லை என்பதுவும் எனக்குத் தெரியும். தற்காலிக வதிவிட அனுமதியை நீடிப்பது மறுக்கவும் , அல்லது அதை ரத்துச் செய்யவும் முடியும் என்பதுவும் எனக்குத் தெரியும்.

டெனிஷ் சமுதாயத்திற்கு எனது பங்களிப்பைச் செய்வதும், எனது வாழ்க்கைச் செலவுகளுக்கு நானே பொறுப்பை ஏற்கும் முயற்சியும், நான் நாடு திரும்பவேண்டிய நிலை வந்தால் , இவை எனக்கு ஒரு பலத்தை அளிக்குமென்று அறிவேன்.

இங்கே வசிக்கும் ஒரு வெளிநாட்டவர் ( Udlænding) , அவர் தன் சொந்தநாட்டிற்கு அல்லது முன்னாள் வசிப்பிட நாட்டிற்குத் திரும்புவதற்கு விரும்பினால் , அதற்குரிய சட்டத்தின் ( Repatrieringsloven) கீழ் நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்பது எனக்குத் தெரியும்.

## நான் புதிதாக வந்த வெளிநாட்டவர் - புதிதாக வந்துள்ள வெளிநாட்டினருக்கு:

(கீழே உள்ள பந்திகள் , இங்கு கையெழுத்திடும், புதிதாக வந்துள்ள வெளிநாட்டவருக்கு மட்டுமே உரியதாக இருக்கும்)

நான் டெனிஷ் மொழியை கற்றுக் கொள்ள விரும்புவதுடன், டெனிஷ் சமுதாயத்தையும் விரைவில் அறிந்து கொள்ள விரும்புகிறேன். நகராட்சி மன்றம் (Kommume) வழங்கும் மொழிக் கல்வித் திட்டத்தில் பங்கேற்பதன் மூலம், நான் டெனிஷ் மொழியை கற்றுக் கொள்ள முடியும் என்பது எனக்கு தெரியும்.

நான் சீக்கிரம் தொழில் வாய்ப்பில் ( arbejdsmarkedet) பங்கேற்பதன் மூலம், சுயமாக எனது பொறுப்புக்களை ஏற்பேன். நான் சாதாரண வேலைவாய்ப்புகளை அடைவதற்கு, நகராட்சியின் உதவியுடன் ,
( Kommune) என் ஒப்பந்தத்தில் விவரித்துள்ள நடவடிக்கைகளில், பங்குபெற முடியும் என்பதும் எனக்குத் தெரியும்.

எனது வதிவிட அனுமதியை நீடிப்பது , அந்த வதிவிட அனுமதிப் பிரிவின் அடிப்படையில் தங்கியிருக்கிறது. தாய்நாட்டின் நிலமைகள் மாறி, அந்த மக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லையெனில் , அவர்கள் அகதிகளாக குடியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் , அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போகலாம் என்பதுவும் எனக்குத் தெரியும்.
இந்த நாட்டில் வசிக்கும் அகதிக்கு இங்கு பாதுகாப்பு தேவைப்படாத பட்சத்தில், அந்த அகதியின் குடும்ப ஒருங்கிணைப்பு நபர் ( familiesammenført) , அகதி அந்தஸ்து கோருவது அவசியமில்லை என்பதுவும் எனக்குத் தெரியும்.

திகதி: கையெழுத்து